அவை எல்லா இடங்களிலும் நிறுத்தப்பட வேண்டும் என்றால் இரண்டு நாட்கள் கழித்துத்தான் போய்ச் சேரும் நிலைமை ஏற்படும். ஆகவே, எங்கேயாவது நிற்கக் கூடாத இடத்திலே அந்தப் பேருந்துகள் நின்றால் அது யாருடைய கண்ணிலேயாவது பட்டால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு ஒவ்வொரு மாதமும் ஒதுக்கப்படும் சேசிஸ்கள்.

* வினா எண் 157—திரு. இரா. சண்முகம், திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு மாதம் எத்தனை பஸ் சேசிஸ்கள் ஒதுக்கப்படுகின்றன ?

(ஆ) ஒதுக்கப்பட்ட பஸ் சேசிஸ்கள் எல்லாம் எடுக்கப்படு கின்றனவா ?

(இ) இல்லையென்றால் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) 170.

(ஆ) இல்லை.

(இ) மாதம் சுமார் 81லிருந்து 156 வரை எடுக்கப்படு கின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஜுன் 1980-ல் இருந்து மிகுந்த இழப்பில் இயங்கிக் கொண்டிருப்பதாலும், போதிய நிதி வசதி இல்லாமையாலும் மாதம் 170 பஸ் சேசிஸ்கள் எடுக்க முடியவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, அமைச்சரவர் கள் சேசிஸை எடுப்பதற்குப் பொருளாதார வசதி இல்லை என்று சொன்னார்கள். உலக வங்கியின் மூலம் கடன் பெற்று அதன் மூலம் அவற்றை எடுப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது உலக வங்கியினர் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் கொடுப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதன் மூலமாக 555 சேசிஸ்களை எடுப்பதற்கு இருக்கிறோம். ஆனால் மாதந் தோறும் எடுப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அது தனியாக அதிகமாக நமக்குக் கொடுக்கப்படுகின்றது. மாதம் 170-ஐ நமக்குக் கொடுப்பதற்கு அந்த நிறுவனங்கள் ஒத்துக்

கொண்டிருக்கின்றன. அந்த 170-ஐயும் இதற்கு முன்பெல்லாம் நாம் எடுத்துக்கொண்டுதான் இருந்தோம். ஆனால் டீசல் விலை உயர்வின் காரணமாகவும் அந்த அளவுக்கு நாம் கட்டணத்தை உயர்த்தாததன் காரணமாகவும் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆகவே முழு சேசிஸ்களையும் எடுக்க முடியவில்லை. 150, 125 என்று நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் முழுவதையும் எடுப்பதற்காக அரசு தீவிரமாக பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு சேசிஸ் எடுக்க எவ்வளவு தொகை ஆகின்றது? ஓர் ஆண்டில் சேசிஸ் விலை எவ்வளவு உயர்ந்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1975–76ஆம் ஆண்டில் 99 ஆயிரம் ரூபாய் அதாவது கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய் என்பது சேசிஸ் விலையாக இருந்தது. ஆனால் தற்போது 1 லட்சத்து 99 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வரையிலும் ஆகின்றது. அதாவது இரண்டு மடங்கு ஆகின்றது. அதேபோன்று டீசல் விலை 1976ஆம் ஆண்டு 1 ரூபாய் 30 பைசா என்றிருந்தது. இப்போது 2 ரூபாய் 90 பைசாவை எட்டிக் கொண்டு வந்திருக்கின்றது.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, சேசிஸ் ரொக்கப் பணம் செலுத்தி எடுக்கப்படுகின்றதா? அல்லது கிரெடிட் நோட்டிலே அவர்கள் கொடுப்பார்களானால் அந்தச் சேசிஸ் தேவையில்லை என்று சொன்னால் அவற்றை லாரி சேசிஸ்களாகவும், வேன் சேசிஸ்களாகவும் எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; தலைவர் அவர்களே, சேசிஸ் தேவையில்லை என்ற நிலைமை இல்லை. பணம் தேவை என்ற நிலைமைதான் இருக்கின்றது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் [667ம் பக்கம் பார்க்க.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

143–667ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.